<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial form No,53</u>

<u>(See Rule 42)</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure</u>

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 53/2023 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.1/ புகார்தாரர் |
| பெயர் | சந்திரசேகர் |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | கணபதி சாமி |
| கணவர் பெயர் | |
| கிராமம்: பெருமாநல்லூர் | ஜாதி : |
| தாலூக்கா : | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 18.10.2023

All Accused present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு பெட்ரோல் பங்க் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 24.09.2022 ம் தேதி மதியம் சுமார் 12.00 – 01.00 மணியிருக்கும். பூத்தோட்டம்,, பெருமாநல்லூர் என்னுடைய வீட்டில் இருந்த போது, வெள்ளை சட்டை அணிந்த ஒரு நபர் என் வீட்டிற்கு வந்து காவல் ஆய்வாளர் வீட்டிற்கு வெளியே நிற்பதாகவும், என்னை வெளியே வருமாறு அழைத்தார். நான் எந்த காவல் நிலையத்தின் ஆய்வாளர் என்று கேட்டேன். அதற்கு உங்களுக்கு தெரிந்த ஆய்வாளர் தான் வந்திருக்கிறார் என்று கூறினார். நான் உடனே வெளியே வந்தேன். அப்போது வெள்ளை நிற ஸ்விப்ட் கார் என் வீட்டிற்கு வெளியே உள்ள கேட்டின் அருகே நின்றுக் கொண்டிருந்தது. அதன் பதிவு எண். TN 19 BV 1562 ஆகும். நான் அருகே சென்று பார்த்த போது, முன்னாள் ஒரு காவல் ஆய்வாளர் சீருடையில் அமர்ந்திருந்தார். அவர் என்னைப் பார்த்து என்னை விசாரிக்க வேண்டும்

என்றும், வண்டியில் ஏறுமாறு கூறினார். நான் எங்கிருந்து வருகிறீர் என்று கேட்டதற்கு அவர் காவல் துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து வருவதாக கூறினார். அப்போது இந்தப் பகுதியானது காவல் துறை கண்காணிப்பாளர் வரையறைக்குள் வரும் பகுதி என்று கூறினேன். என்னை அழைத்த வந்த நபர் பின் கதவை திறந்து, என்னை பிடித்து காரிக்குள் தள்ளினார். அப்போது ஒரு பெண்மணியும், எனக்கு தெரிந்த ரத்தினராஜ் என்பவரும் உள்ளே இருந்தார்கள்.

அச்சமயத்தில் எதற்கு என்னை அழைத்தார் என்று என் தோட்டத்தில் குடியிருக்கும் நாகராஜ் என்பவர் என் பின்னால் வந்திருந்தார். நான் அப்போது காருக்குள் ஏறாமல் வாக்குவாதம் செய்தும் தடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது நாகராஜிடம் உடனே என் மனைவியை அழைத்து வரக் கூறினேன். உடனே அங்கு என் மனைவி சங்கீதா, டிரைவர் சிவராமன், ஜெயராமன் மற்றும் வீட்டின் அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள். எதற்கு காரில் ஏற்றுகிறீர்கள் என்று காரில் இருந்தவர்களை கேட்டார்கள். பின்னர் இரு தரப்பினருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது.பின்னர் அனைவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஒப்படைத்தோம். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி இடதிலிருந்து முதலாக நிற்கும் நபர் தான் காவல் ஆய்வாளராக வந்திருந்தார். இரண்டாவதாக நிற்கும் நபர் தான் என்னை வீட்டில் இருந்து என்னை அழைத்து வந்தவர் ஆவார். மூன்றாவதாக நிற்கும் பெண்மணி தான் காருக்குள் அமர்ந்திருந்தவர். நான்காவதாக நிற்பவர் தான் ரத்தினராஜ் காரு க்குள் அமர்ந்திருந்தவர்.

பின்னர் காவல் துறையினர் எங்களை விசாரித்தார்கள். பின்னர் நான் எழுத்து மூலமாக ஒரு புகார் மனு கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்தப் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு பிரச்சனை ஏற்பட்டவுடன் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் வந்தார்களா என்றால் இல்லை. நாங்கள் தான் ஒப்படைத்தோம். நான் எத்தனை மணியளவில் புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்து

சுமார் 2 –3 மணி நேரம் கழித்து புகார் கொடுத்தேன். நான்கு மணி இருக்குமா என்றால் சரியாக நேரம் நினைவில்லை. புகார் கொடுத்த பின்னர் தான் காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டார்களா என்றால் இல்லை. அதற்கு முன்னரே பார்வையிட்டார்கள். காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வரும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் சம்பவம் நடந்து சுமார் அரை மணி நேரத்திற்குள் வந்துவிட்டார்கள். அப்போது யாரெல்லாம் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் ஆய்வாளருடன் உடன் இரண்டு காவலர்களும் , அவருடைய வாகன ஓட்டுனரும் வந்திருந்தார். பொதுவாக ஜெயராம்ன் மற்றும் சிவராமன் எப்போதும் என் வீட்டில் இருப்பார்களா என்றால் இல்லை. சிவராமன் எனக்கு ஆக்டிங் டிரைவர் ஆவார். அவ்வப்போது அவரை அழைப்பது வழக்கம். 1ம் எதிரி ரத்தினராஜிற்கு என் மகன் பணம் கொடுக்க வேண்டிய விஷயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 10.10.2022ம் தேதி போலீசார் என்னை இது சம்மந்தமாக மறுபடியும் விசாரித்தார்களா என்றால் அவ்வப் போது அழைத்து விசாரிப்பார்கள் தேதி நினைவில்லை. போலீசாரின் விசாரணையில் 1ம் எதிரிக்கு என் மகன் 13,00,000/– லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருப்பதாகவும், அந்த விஷயத்தை புகாரில் சொன்னால் என் மகனை அழைத்து விசாரிப்பார்கள் என்பதால் புகாரில் சொல்லவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் மேகதீஸ்வரன் 1ம் எதிரிக்கு காசோலை கொடுத்து அந்த காசோலை வழக்கானது சாத்தான்குளம் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கு காசோலை காணாமல் போய்விட்டது என்று நான் புகார் கொடுத்துள்ளேன். நான் அடிக்கடி 1ம் எதிரியிடம் என் மகனுக்கு பதிலாக நான் பணம் கொடுக்கிறேன் என்று பேசியுள்ளேனா என்றால் அது பற்றி பேசவில்லை. எங்கள் இருவருக்குள் இருந்த வேறு வியாபாரம் சம்மந்தமாக மட்டும் பேசியுள்ளேன். என் வீட்டிற்கும் மெயின் ரோட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 300 மீ.தூரம் இருக்கும். நான் எந்த அ.இ.அ.தி.மு.க கட்சியில் ஒரு நல்ல பொறுப்பில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியாக உள்ள ஜெயராமனும் கொங்கு ஜனநாயக கழகத்தில் மாநில பொதுச் செயலாளராகவும், சிவராமனும் பொருளாளராகவும் இருந்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மனைவி சங்கீதாவும் அஇஅதிமுகவில் ஒன்றிய கவுன்சிலராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் 1ம் எதிரி ரத்தினராஜிடம்

பணத்தை வாங்கிக் கொண்டு தான் கட்சியில் இருப்பதாக சொல்லி மிரட்டி வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 24.09.2022ம் தேதி என்ன கிழமை என்று நினைவில்லை. சனிக்கிழமை வருமாறும் தான் பணம் தருவதாக கூறினேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் என் வீட்டிற்கு யாரும் வரவில்லை என்றும், என் கட்சியின் பலத்தை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாக அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்திற்கு காவல் துறையினரை வரவழைத்து எதிரிகளை கைது செய்ய வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை ஏமாற்றியது போல் மற்ற எதிரிகளையும் ஏமாற்றி பணம் பரித்ததால் என் மீதும், என் மனைவி மீதும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றால் சரியல்ல. 1 மற்றும் 2ம் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் பெயர் சந்திரசேகர் . நான் தற்சமயம் எந்த விலாசத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் 3/399 பூத்தோட்டம், திருப்பூர் ரோடு , பெருமாநல்லூரில் வசித்து வருகிறேன். இது என்னுடைய நிரந்தர விலாசமா என்றால் நிரந்தர விலாசம் தான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி என்றால் 24.09.2022ம் தேதியாகும். நேரம் என்னவாக இருக்கும் என்றால் மதியம் 12.00 – 01.00 மணிக்குள் இருக்கும். எங்கு வந்து வெள்ளை சட்டை அணிந்து வந்த நபர் என்னை அழைத்தார் என்றால் வீட்டின் சிட் அவுட் அருகே வந்து அழைத்தார். என்னை வற்புறுத்தி கையை பிடித்து இழுத்து அழைத்தாரா அல்லது சாதாரணமாக அழைத்தாரா என்றால் ஆய்வாளர் அவர்கள் அழைக்கிறார் என்று கூறி என்னை அழைத்தார். அவ்வாறு அழைக்கும் போது என்னுடன் யார் இருந்தார் என்றால் என் மனைவி இருந்தார். அவர் அழைத்தவுடன் நான் கேட்டிற்கு வெளியே சென்றேனா அல்லது கேட்டிற்குள் இருந்தேனா என்றால் கார் அருகேயே சென்றுவிட்டேன். நான் கார் அருகே செல்லவில்லை என்றால்

சரியல்ல. என்னுடைய புகாரில் மூன்றாம் எதிரி என்னை காருக்குள் தள்ளியதாக குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் தோள்பட்டையில் கை வைத்து தள்ளியதாக கூறியுள்ளேன். ஆனால் என்னை கடத்தினார்களா என்றால் கடத்த முயற்சித்தார்கள். நான் புகாரில் கடத்த முயற்சித்தார்கள் என்று கூறவில்லை என்றால் சரிதான். புகாரை நான் தான் கைப்பட எழுதினேன். இந்தப் புகாரை நான் எழுதவில்லை என்றும், அவ்வாறு நான் எழுதியிருந்தால் தேதி குறிப்பிட்டிருப்பேன் என்றால் நான் தான் புகாரை கொடுத்தேன். ஆனால் தேதி எழுதவில்லை. புகார் எப்போது கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த சுமார் 02 மணி நேரத்திற்குள் கொடுத்துவிட்டேன். என் வீட்டில் சம்பவ சமயத்தில் யார் இருந்தார் என்றால் நான், என் மனைவி, என் டிரைவர் சிவராமன் இருந்தார்கள். ஜெயராமன் வெளியே பேசிக் கொண்டிருந்தார். சிவராமன் என்னுடைய டிரைவர் ஆவார். நாகராஜ் என் வீட்டில் குடியிருந்து வருகிறார். நாகராஜ் தோட்ட வேலை செய்வாரா என்றால் இல்லை அவர் எலெக்ட்ரீசியன் வேலை செய்வார். நாகராஜ் என்னுடைய தோட்டக்காரர் இல்லை என்றால் அவர் எல்லா வேலையும் செய்வார். சம்பவம் நடக்கும் போது நான் நாகராஜை அழைக்கவில்லை என்றும், அவர் அச்சமயத்தில் அங்கு இல்லை என்றால் சரியல்ல. அதே போல் நாகராஜை விட்டு என் மனைவியை அழைத்தேன் என்பது பொய் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுப்பதற்கு முன்னர் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ஆன புகாரானது நான் எழுதிய புகார் அல்ல என்றும், காவல் துறையினரால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் சம்மந்தமாக எனக்கு சாதகமாக காவல் ஆய்வாளர் செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. 3ம் எதிரி என்னை தொடவும் இல்லை என்னை கடத்த முற்படுத்தவும் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரும், இவ்வழக்கும் பொய்யானது என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு அனுமதியளிக்கப்பட்டும் எதிரியிடம் தெரிவிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.18 19:14:52 +0100

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 18th day of October 2023

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.18 19:14:58 +0100

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.